5

# தைப்பொங்கல்



தைப்பொங்கல் தமிழர் திருநாள், உழவர் திருநாள் என்றும் கூறப்படும். இது சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள். "உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்று கூறுகிறது மணிமேகலை. மணிமேகலை ஒரு பௌத்த நூல். உலகிற்கு உணவு கொடுப்பவர்கள் உழவர்கள். அவர்களை விவசாயிகள், கமக்காரர்கள் என்றும் சொல்லுகிறோம்.

நெற்பயிரை அறுவடை செய்யும் காலம் தை மாதம். தை மாதம் முதலாம் திகதி தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. பொங்கல் தினத்தில் தமிழர்கள் அதிகாலையில் எழும்புவார்கள். குளிப்பார்கள். புத்தாடை அணிவார்கள். நிலத்தில் கோலம் இடுவார்கள்.

பொங்கல் பானைக்குக் குங்குமம், மஞ்சள் பூசுவார்கள். மா இலையை அல்லது இஞ்சி இலையை அதனைச் சுற்றிக் கட்டுவார்கள். அதனை அடுப்பில் கிழக்குத் திசையை நோக்கி வைப்பார்கள். அதில் பாலை ஊற்றுவார்கள். பால் கிழக்கு நோக்கிப் பொங்கி வழிய வேண்டும். இதுவே மகிழ்ச்சி தரும். பால் பொங்கிய பின் பொங்கல் பானையில் அரிசி, சர்க்கரை, ஏலம், பயறு, முந்திரிப் பருப்பு(கஜூ) முதலியவற்றை இடுவார்கள். சூரியன் உதிக்கும் கிழக்குத்திசை நோக்கி வாழை இலையை வைப்பார்கள். அதில் வெற்றிலை, பாக்கு, கரும்பு, இஞ்சி இலை, வாழைப்பழம் முகலியவற்றை வைப்பார்கள். பொங்கல் பொங்கியதும் சூரியனை வணங்குவார்கள்.

தைமாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுவது வீட்டுப் பொங்கல். அடுத்த நாள் நிகழ்வது மாட்டுப் பொங்கல். பண்டைய காலத்தில் எருதுகளும், மாடுகளுமே நிலத்தை உழுதன. பண்படுத்தின. சூடு மிதிக்க உதவின. மாடுகளுக்கு நன்றி கூறுவதற்காகவே மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. மாடுகளைக் குளிப்பாட்டுவார்கள். மலர் மாலை சூட்டுவார்கள். பொங்கலை அதற்கு ஊட்டுவார்கள்.

பொங்கலை மகிழ்ச்சியுடன் மக்கள் கொண்டாடுவார்கள். பொங்கல் நாளன்று மாட்டு வண்டிச்சவாரி, மஞ்சு விரட்டுதல் முதலிய விளையாட்டுக்கள் நடைபெறும்.



**கோலம் இடுதல்**

சிறுவர்களுக்குத் தைப்பொங்கல் கொண்டாட்டம் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும்

தைத் திருநாள் இல்லமெல்லாம்
தளிர்த்திடும் தைப்பொங்கல்
இத்தனை நாள் காத்திருந்தோம்
இனிய தமிழ்ப் பொங்கல்

கோலமிட்டு விளக்கேற்றிக்
கும்பிடுவாள் அம்மா
பாலெடுத்துப் பொங்கலுக்குப்
பானை வைப்பார் அப்பா

விரும்பிய மா வாழை பலா
வித விதமாய்க் கனிகள்
கரும்பிள நீர் படைத்து மனம்
களித்திடுவோம் நாங்கள்

வெண்ணிறப் பால் பொங்கி வர
வெடிசுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கல் உண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்.

**கவிஞர் அம்பி.**

நாமும் தைப்பொங்கலில் நேரிற் கலந்து கொண்டாடும் போது பெரும் மகிழ்வைத் தருகின்றது இப் பாடல். நீங்களும் பாடுங்கள்.

தைத் திருநாள் வந்ததென்று
தாளம் போட்டுப் பாடுவோம்
தைமகளே வருக என்று
தமிழில் பாடி ஆடுவோம்

மங்கலங்கள் பெருக என்றே
மனைகள் தோறும் பொங்குவோம்
மனித நேயம் தழைக்க வென்றே
மகிழ்ந்து நாமும் பொங்குவோம்
கழனி எங்கும் விளைவு பெருகக்
கருணை செய்தான் கதிரவன்
அவனைப் போற்றிப் பொங்கலிட்டு
ஆடிப் பாடி மகிழுவோம்

பஞ்சமும் பசியும் நீங்கி யெங்கும்
பசுமை நன்கு நிலைத்திடப்
பாரில் உழவன் செய்யும் பணியைப்
பாடிப் பாடி ஆடுவோம்.

புத்தரிசிப் பொங்கலிட்டுப்
புத்தாடை அணிந்திடுவோம்
பட்டாசு சுட்டு நாங்கள்
பாடிப் பாடி ஆடிடுவோம்.

யசோதா பாஸ்கரன்
''மலரும் மலர்கள்''

## கிரகித்தற் பயிற்சி

1. தைப் பொங்கலுக்கு வேறு பெயர் என்ன?
2. தைப் பொங்கல் யார் யாருக்கு நன்றி செலுத்தும் நாள்?
3. நெற்கதிரை அறுவடை செய்யும் காலம் எது?
4. பொங்கல் பானையில் இடப்படுபவை எவை?
5. மாட்டுப் பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படும்?
6. தைப்பொங்கல் கொண்டாடுவோர் யாவர்?
7. மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுவதன் நோக்கம் யாது?
8. மனக்களிப்பிற்கான காரணம் யாது?

## செயற்பாடு

### தைப்பொங்கல்

1. தைப்பொங்கல் உழவர் திருநாள் என்றும் கூறுவர்.
2. நன்றிக்கு விழா எடுக்கும் நன்னாள் தைப்பொங்கல்.
3. தை பிறந்தால் வழி பிறக்கும்.

4. மாட்டுப் பொங்கலைப் பட்டிப் பொங்கல் என்பர்.
5. பொங்கலோ பொங்கல் பொங்கி வழியுது அப்பா.

மேலே தைப்பொங்கல் என்னும் தலைப்பில் உள்ள வாக்கியங்களை உச்சரித்துச் சொல்லுங்கள்.

## தனிவாக்கியங்களும் தொடர் வாக்கியங்களும்

### தனிவாக்கியம்

ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்டமையும் வாக்கியம் தனி வாக்கியமாகும்.

### தொடர் வாக்கியம்

ஓர் எழுவாயின் பல செயல்கள் தொடர்ந்து வந்து ஒரு செயல் மாத்திரம் முற்றுப் பெற்று நிற்பது தொடர்வாக்கியமாகும்.

**பின்வருபவை தனி வாக்கியங்கள்**

தைப்பொங்கலைத் தமிழர் திருநாள் என்பர்.
தைப்பொங்கலை உழவர் திருநாள் என்பர்.

***இவ்வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக்கினால்***

தைப்பொங்கலைத் தமிழர் திருநாள், உழவர் திருநாள் என்பர்.
என அமையும்.

இது பொன்னாள்.
இது நன்றிக்கு விழா எடுக்கும் நன்னாள்.

***இவ்விரண்டும் தனிவாக்கியங்கள். இவற்றை***

இப் பொன்னாள் நன்றிக்கு விழா எடுக்கும் நன்னாள் எனத் தொடர் வாக்கியமாக்கலாம்.

மாட்டுப் பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டுவார்கள்.
குங்குமம் பூசுவார்கள்.
பொட்டு வைப்பார்கள்.
பொங்கலை ஊட்டுவார்கள்.
***மேலேயுள்ள வாக்கியங்கள் அனைத்தும் தனிவாக்கியங்கள் ஆகும். இவற்றைத் தொடர் வாக்கியமாக்கினால் பின்வருமாறு அமையும்.***
மாட்டுப் பொங்கலன்று, மாடுகளைக் குளிப்பாட்டிக் குங்குமம் பூசிப் பொட்டு வைத்து, மலர்மாலை சூட்டிப் பொங்கல் ஊட்டுவார்கள்.

நீங்கள் தனிவாக்கியம் என்றால் என்ன? தொடர் வாக்கியம் என்றால் என்ன? எவ்வாறு தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியம் ஆக்கலாம் என அறிந்து கொண்டீர்கள். இப்போது கீழேயுள்ள செயற்பாட்டைச் செய்யுங்கள்.

## செயற்பாடு

**பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியங்கள் ஆக்குங்கள்.**

1. உழவர்கள் உணவு கொடுப்பவர்கள். அவர்கள் உயிர் கொடுப்பவர்கள்.
2. தைமாதத்தில் அறுவடை செய்வார்கள் தைப்பொங்கல் கொண்டாடு வார்கள்.
3. தைப்பொங்கலன்று அம்மா கோலமிட்டாள். அம்மா கும்பிட்டாள்.
4. எருதுகள் நிலத்தைப் பண்படுத்த உதவின. சூடுமிதித்து நெல்மணிகளை வேறாக்கவும் உதவின.
5. முதல் நாள் வீட்டுப் பொங்கல் நடைபெறும். அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் நடைபெறும்.

**பின்வரும் தொடர்வாக்கியங்களைத் தனி வாக்கியங்கள் ஆக்குங்கள்.**

1. பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டி, குங்குமம் பூசிப் பொட்டு வைப்பார்கள்.
2. வெண்ணிறப் பால் பொங்கி வர நாங்கள் வெடிசுடுவோம்.
3. புத்தரிசிப் பொங்கல் இட்டுப் புத்தாடை அணிவோம்.